# 24

### சபை:

# இதன் இசை [2]

## இசையின் வகை - உதாரணங்கள்

1. **இயேசு இராப்போஜனத்தை ஏற்படுத்திய பொழுது, அவரும் சீஷர்களும் என்ன செய்தனர் (மத். 26:30)?**
2. **சிறையில் அடைபட்டிருந்தபோது பவுலும் சீலாவும் தங்களது உணர்வுகளை எவ்வாறு வெளிப்படுத்தினர் (அப். 16:25)?**
3. **பவுல், தாம் எவ்வாறு பாடுவதாகக் கூறினார் (1 கொரி. 14:15)?**
4. **புறஜாதியாரின் நடுவிலே கிறிஸ்து எவ்விதமாய் மேன்மைப் படுத்தப்பட வேண்டியவராய் இருந்தார் (ரோமர் 15:9; சங். 18:49)?**
5. **சங். 22:22 வசனம் எபி. 2:12ல் எவ்வாறு நிறைவேற்றப்பட்டது?** *இவ்விடத்தில் அது நிறைவேற்றப்பட்டது என்று எபிரெய ஆசிரியர் கூறவில்லையா?*

## இசையின் வகை - கட்டளை

1. **எபேசியருக்குப் பவுல் எவ்விதம் புத்தி கூறினார் (எபே. 5:19)?**
2. **மேலும் அவர் கொலோசெயருக்கு எவ்வாறு கட்டளையிட்டார் (கொலோ. 3:16)?**
3. **எபிரெயக் கிறிஸ்தவர்கள் ஒப்புக் கொடுக்க வேண்டியிருந்த கனி என்னவாக இருந்தது (எபி. 13:15)?**
4. **எல்லாக் கிறிஸ்தவர்களுக்கும் யாக்கோபின் கட்டளையைத் தருக (யாக். 5:13).**

## பாட வேண்டிய பாடல்கள்

1. **பாட வேண்டிய பாடல்களின் மூன்று வகைகளைக் குறிப்பிடுக (எபே. 5:19; கொலோ. 3:16).**
   *அ. "சங்கீதங்கள்;" "கீர்த்தனைகள்" மற்றும் "ஞானப்பாட்டுகள்" என்பவற்றை விளக்கப்படுத்தவும். "சங்கீதம்" என்பது அதன் பண்பை சங்கீதங்களில் இருந்து எடுத்தாண்டது; "கீர்த்தனை" என்பது தேவனைத் துதித்தலைப் பற்றியது (அப். 16:25); மற்றும் ''ஞானப்பாட்டுகள்'' என்பவை ''தேவனை மேன்மைப்படுத்தவும் மனிதர்களுக்குப் பக்தி விருத்தியூட்டவும்'' ஏற்ற வகையில் வடிவமைக்கப் பட்டவையாகும்.*

ஆ. இவைகளை ஆராதனையில் எவ்விதம் பயன்படுத்த வேண்டும்? இவை யாவும் பாடப்பட வேண்டியவைகள், இசைக்கப்பட வேண்டியவையல்ல.

இ. ஆவிக்குரிய, உணர்வுப்பூர்வமான மற்றும் நடுத்தரமான பாடல்களைப் பற்றி விளக்கப்படுத்தவும்.

(1.) ஆராதனையில் பயன்படுத்தப்பட வேண்டியவை யாவை?

(2.) உடல் இயக்கத்தைத் தூண்டுகின்ற பாடல்கள் பாடப்பட வேண்டியவைகளாய் உள்ளனவா?

## பாடுதல் எவ்வாறு செய்யப்பட வேண்டும்?

**1. பாடுதலுக்குக் கிறிஸ்தவர்கள் முழுமையாக எவ்விதத்தில் தயார் செய்யப்பட்டவர்களாய் இருக்க வேண்டும் (எபே. 5:18, 19; கொலோ. 3:16)?**

**2. பவுல் தாம் எவ்விதத்தில் பாடுவதாகக் கூறினார் (1 கொரி. 14:15)?**

அ. ஆவியுடன் பாடுதல் என்பது எதை அர்த்தப்படுத்துகின்றது?

ஆ. கருத்துடன் பாடுதல் என்பது எதை அர்த்தப்படுகின்றது?

இ. என்றால், ஒருவர் எப்பொழுது ஆவியுடனும் கருத்துடனும் ஜெபிக்கின்றார்?

**3. பாடுதலில், மற்ற சகோதர சகோதரிகள் எவ்வாறு கருதப்பட வேண்டும் (எபே. 5:19அ)?**

பாடுகிறவர்கள் "ஒருவருக்கொருவர்" என்ன பேசிக் கொள்ள வேண்டியவர்களாய் உள்ளனர் (எபே. 5:19அ)?

**4. இருதயம் எவ்விதத்தில் ஈடுபடுத்தப்பட வேண்டும் (எபே. 5:19; கொலோ. 3:16)?**

**5. துதியானது யாருக்கு ஏறெடுக்கப்பட வேண்டும் (எபே. 5:19; கொலோ. 3:16)?**

**6. பாடுதலில், அற்பிக்க வேண்டிய கனி என்ன (எபி. 13:15)?**

அ. "உதடுகளின் கனி" என்பது பாடுதலாக இருப்பதில்லையா (எபி. 13:15ஆ)?

என்றால், இசைக் கருவிகள் இப்படிப்பட்ட பாடுதலை எவ்வாறு தடை செய்யும்?

ஆ. தேவனுடைய கட்டுப்பாடுகள் மதிக்கப்பட்டால் எப்படியிருக்கும் (வெளி. 22:14)?

அவருடைய வசனத்தை மதித்தல் என்பது இசைக் கருவிகளைத் தடை செய்யாதா?

## ஆழ்ந்து சிந்திக்கச் சில விஷயங்கள்

**1. பாடகர் குழுவின் மூலம் பாடுதல் என்பது ஏற்கப்படக் கூடிய துதியைச் சபையிடமிருந்து எவ்வாறு களவு செய்கின்றது?**

**2. வாடகைப் பாடகர்கள் சபையாரின் பாடுதலை எவ்வாறு பாதிக்கின்றனர்?**

***3. யார் பாட வேண்டும் (எபே. 5:19; கொலோ. 3:16; யாக். 5:13)?***

***4. ஒருவர் பாட முடிந்தும், ஆராதனையில் அவர் பாடாதிருந்தால், அவர் தேவனைப் பிரியப்படுத்துகின்றாரா?***

***5. ஒருவர் பாட முடியாவிட்டால், ஆராதனையில் பங்கேற்க அவர் என்ன செய்ய வேண்டும்?***

***6. பாடுதல் என்பது ஆராதனையின் இன்றியமையாத பாகமாக உள்ளதா (சங். 119:172; 1 யோவா. 5:17)?***

*அ. அப்படியானால், பாடல் ஊழியத்தை மாறுபட்ட வகையில்/ விருப்பு வெறுப்பற்ற வகையில் பார்ப்பது பாவமல்லவா?*

*ஆ. "கருத்தோடு பாடுதல்" என்பது எதை நீக்கிப் போடுகின்றது? கடிதங்களையும் தாள்களையும் வாசித்தல், சூயிங்கம் மெல்லுதல், மற்றும் குசுகுசுத்தல்.*

*இ. பாடல் ஊழியத்தைத் தவறாகப் பயன்படுத்தாமல், எவ்விதத்தில் சரியாகப் பயன்படுத்த வேண்டும்?*